செய்தி வெளியீடு எண்:49 நாள்: 22.01.2013

<u>செய்தி வெளியீடு</u>

**மாண்புமிகு புரட்சித்தலைவி தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. ப. மோகன் அவர்கள் தலைமையில் பட்டு வளர்ச்சி மற்றும் கைத்திறத் தொழில்கள் துறையின் உயர் அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம். தேசிய அளவில் பட்டு உற்பத்தியில் தமிழ்நாடு தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக முதலிடம் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.**

மாண்புமிகு புரட்சித்தலைவி தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க இன்றைய தினம் 22.1.2013 காலை 11.30 மணியளவில் சென்னை தலைமைச் செயலகத்தில் பட்டு வளர்ச்சி மற்றும் கைத்திறத் தொழில்கள் துறையின் உயர் அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. ப. மோகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சர் அவர்கள் பட்டு வளர்ச்சித்துறை தருமபுரி, ஈரோடு, வேலூர், திருச்சி மற்றும் மதுரை என 5 மண்டலங்கள் மற்றும் 105 தொழில்நுட்ப சேவை மையங்களுடன் செயல்பட்டு, மல்பரி விரிவாக்கம், பட்டு முட்டை வளர்ப்பு, பட்டுக்கூடு அறுவடை, கச்சாப்பட்டு நூல் உற்பத்தி–வெண்பட்டு உற்பத்தி, பட்டு முறுக்கேற்றுதல், மேம்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. அது மட்டுமல்லாமல், பட்டு விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீடு மற்றும் மகளிர் நலக்காப்பீட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதன் மூலம் மாண்புமிகு புரட்சித்தலைவி தமிழக முதல்வர் அம்மா அவர்களின் சீரிய தலைமையிலான அரசு பட்டு விவசாயிகளுக்கு சமூகப் பாதுகாப்பு அளித்து வருகிறது என்றார்.

2011–12ஆம் ஆண்டில் 36,485 ஏக்கர் அளவில் மல்பரி சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலையில், நடப்பு ஆண்டிற்கு 5000 ஏக்கர் கூடுதலாக சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு டிசம்பர் 2012 வரை 5158.20 ஏக்கரில் மல்பரி சாகுபடி செய்து 103 விழுக்காடு சாதனை படைத்துள்ளது பராட்டுக்குரியது. மேலும் கூடுதல் பரப்பில் பயிரிட தக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

பட்டுக்கூடு உற்பத்தித் திறன், இளம்பட்டு புழுக்கள் விரிவாக்கம் மற்றும் வெண்பட்டு உற்பத்தியில் தொடர்ந்து தேசிய அளவில் கடந்த நான்கு ஆண்டுகளாக தமிழகம் முதலிடத்தில் உள்ளது என தெரிவித்தார்

மாண்புமிகு புரட்சித்தலைவி தமிழக முதல்வர் அம்மா அவர்களின் சீரிய தலைமையிலான அரசு மல்பரி பயிர் செய்பவர்களுக்கு வழங்கப்படும் மானியத் தொகையினை ஏக்கருக்கு ரூ.4125லிருந்து ரூ.6750ஆக உயர்த்தியும், பட்டுப்புழு வளர்ப்பு குடில் கட்ட வழங்கப்படும் மானிய தொகையினை ரூ30,000லிருந்து ரூ.37,500ஆகவும் உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளார்கள் என்பதையும் சுட்டிக் காட்டினார். மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொதுத்துறை நிறுவனமான தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் "பூம்புகார்" தமிழகத்திலுள்ள கைவினைஞர்களால் தயாரிக்கப்படும் கைவினைப் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்திட கண்காட்சிகளை நடத்தி, தமிழ்நாடு கைவினைப் பொருட்களை உலகளவில் காட்சிப்படுத்தும் தருணத்தில், 2011–12 ஆம் ஆண்டில் ரூ.27.50 கோடி விற்பனையை அடைந்துள்ளது. எனவே, நடப்பாண்டின் விற்பனை குறியீடான ரூ.30.50 கோடி இலக்கினை எய்த தொடர்ந்து நடடிவக்கை மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கினார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கும் வகையில், தமிழ்நாடு பட்டு வளர்ச்சித் துறையும், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் பூம்புகார் நிறுவனமும் மிகுந்த அக்கறையுடனும், அர்பணிப்போடும் செயலாற்றி மாண்புமிகு புரட்சித்தலைவி தமிழக முதல்வர் அம்மா

அவர்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப தொலைநோக்கு திட்டம் 2023 வெற்றி பெறுவதில் நமது ஒத்துழைப்பும் இடம்பெறும் வகையில் அனைவரும் பணியாற்ற வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறையின் அரசு செயலாளர் திரு. ஜி. சந்தானம், இ.ஆ.ப., தலைமை வனக் காவலர் மற்றும் பட்டு வளர்ச்சித் துறை இயக்குநர் திரு. வி. பிரபாகரன், இ.வ.ப., தமிழ்நாடு கைத்திறத் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் நிதி மேலாளர் திரு A.S. ஞானேஸ்வரன் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**